# சகலமும் நன்மைக்கு ஏதுவாக

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோ 8:28)**




இங்கு நாம் காணும் ஒரு காரியம், நம் வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதாகும். இதை நாம் புரிந்துகொள்ள, மாம்சத்தின்படி சிந்திப்போமானால், நம் வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்களை, இழப்புகளை, காயங்களை, துரோகங்களை நாம் கண்டிருக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் தான் பல முறை அனுபவித்த துன்பங்களை, **2 கொ 11:23-28** வசனங்களில் விளக்குகிறார். இவையெல்லாம் எப்படி நன்மையானதாக இருக்க முடியும் என்று நாம் சிந்திக்கலாம். யோசேப்பின் வாழ்வில் கூட பலமுறை அவர் இன்னல்களை அநுபவித்தார். சொந்த சகோதரரால் வந்த தீமைகள், உண்மையாய் இருந்தும் வந்த வீண் பழி என்று பல காரியங்கள் உண்மையில் தீமையானதாகவே இருந்தது. உண்மையில் நம் வாழ்வில் நாம் சந்தித்த இழப்புகள் வேதனையானதும், துன்பம் தரக்கூடியதும் ஆகும்.

கடந்த இரண்டு வருடங்களாக இக்கொடிய கொரோனாவினால் ஏற்பட்ட பாதிப்புகள் கொஞ்சமல்ல. அவை எல்லாம் அநேகர் வாழ்வில் துன்பத்தை கொண்டு வந்ததேயொழிய நன்மை எதுவும் கொண்டு வரவில்லை. தேவ பிள்ளைகளும், மேலும் அநேக ஊழியர்களும், ஊழியங்களும் கூட இக்கொரோனாவினால் பாதிக்கப்பட்டது. இவையெல்லாம் இப்படியிருக்க சகலமும் நன்மைக்கே என்பது நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கலாம். ஆனால் நாம் இங்கு இரண்டு விஷயங்களை கவனிக்க வேண்டும். ஒன்று அவருடைய தீர்மானம், இரண்டு அவரிடத்தில் நாம் அன்பு கூர்வது. ஆம் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்ட நமக்கு, நம் வாழ்வில் நடப்பதெல்லாம் ஏதோ இவ்வுலக தற்கால சூழ்நிலையினால் நடப்பதல்ல. இவை எல்லாவற்றையும் கர்த்தராகிய ஆண்டவர் ஏற்கனவே தம்முடைய தீர்மானத்தின்படி நம் வாழ்க்கையில் முன் குறித்துவிட்டார். மேலும் நம் வாழ்வில் நடந்த வேதனையான காரியங்கள் நன்மையானதாக இல்லாதிருந்தும், அவை எல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

யோசேப்பை அவருடைய சகோதரர் குழியில் தள்ளியது, அவரை எகிப்திற்கு விற்றது ஆகியவற்றினால் தாயை இழந்த அவர் தகப்பன் அன்பையும் பெற முடியாமல், இளம் வயதில் அடிமை வாழ்க்கை வாழ நேரிட்டது ஒரு துன்பகரமான காரியமே. ஆனால் அந்தத் துன்ப சூழ்நிலையையும், தேவன் அவர் வாழ்வில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நன்மையான காரியத்திற்கு ஏதுவாக மாற்றினார். இதை யோசேப்பே பிற்காலத்தில் உணர்ந்து அறிக்கையிடுகிறார். **"நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்." (ஆதி 50:20)**. ஆம் அது அவருக்கு மாத்திரமல்ல வெகு ஜனங்களுக்கு, நன்மைக்கு ஏதுவாக அமைந்தது. ஆனால் இவை எல்லாவற்றிலும் தேவனுடைய அநாதி தீர்மானம் மற்றும் நாம் அவரிடத்தில் அன்பு கூருவதும் இன்றியமையாததாகும். தேவனுடைய தீர்மானம் இல்லாமல், நம்முடைய அறீவினத்தினால் தீமை உண்டானாலும் அல்லது தீர்மானத்தின்படி வாழ, அவரிடத்தில் அன்புகூறமுடியாமற் போனாலும், அவை நன்மைக்கு ஏதுவாக மாற வழியில்லை. ஏனெனில் **1 யோ 5:3** கூறுகிறது **"நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்"** என்று.

ஆனால் நாம் மனந்திரும்பி தேவனிடத்தில் அவருடைய தீர்மானத்தின்படி வாழ நம்மை முழுமனதோடு அர்ப்பணிக்கும் பொழுது, கடந்த காலங்களில், நம் வாழ்வில் தீமையாய் நடந்த காரியங்களையுங்கூட, நமக்கு நன்மைக்கு ஏதுவாக மாற்ற தேவனால் கூடும். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று வேதம் தெளிவாக கூறுகிறது. இதை நாம் ரூத்தின் வாழ்க்கையில் அவளுடைய கடந்த கால இழப்புகளை, எதிர்கால வாழ்வின் நன்மைக்கு ஏதுவாக தேவன் மாற்றினதை காணலாம். அதற்கு காரணம் **ரூத் 1:16** இல் அவள் எடுத்த தீர்மானமேயாகும். **"அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்."** என்று அவள் எப்பொழுது அறிக்கையிட்டாலோ, அப்பொழுதே அவள் **"உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்." (ரூத் 2:12)** என்ற ஆசிர்வாதத்தை போவாஸ் மூலமாகவே பெற்றுக்கொண்டாள். மக்லோன், கிலியோன் ஆகியோரின் இழப்பு, ஓர்பாள் மற்றும் ரூத்தின் வாழ்வில் துன்பமான காரியமானாலும், அவளுடைய தீர்மானத்தின்படி, போவாஸ் மூலமாய் தாவீதும் தாவீது மூலமாய் இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவும் இவ்வுலகில் வர, அதற்கு தன்னை தேவனுக்கு அர்ப்பணித்த ரூத்தின் வாழ்க்கையில், அவளுடைய இழப்பு போவாஸின் மூலமாய் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்பட்டது.

**"போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்" (மத் 1:5)** என்று ஆண்டவருடைய வம்ச அட்டவணையில் அவளுடைய பெயர் இடம் பெற்றது. மேலும் ரூத் என்ற பெயரிலேயே வேதபுத்தகத்தில் அவளுடைய சரித்திரம் எழுதப்பட்டது. இவையெல்லாம் ரூத்தின் வாழ்க்கையில் தீமையான காரியங்கள் நடந்திருந்தும், நடந்த காரியங்கள் யாவும் நன்மைக்கு ஏதுவாகவே தேவனால் மாற்றப்பட்டதை நமக்குத் தெளிவாகக் காண்பிக்கிறது. ஆனால் சொந்த தீர்மானத்தின்படி சென்ற ஓர்பாளின் வாழ்வோ, அதற்கு பிறகு காணாமல் போயிற்று. எனவே இக்கொடிய கொரோனா துன்ப சூழ்நிலை மத்தியில், இன்னும் நம் தனிப்பட்ட வாழ்வில் அனுபவித்த அனுபவிக்கிற துன்பங்கள் மத்தியில், இவை எல்லாவற்றையும் நன்மைக்கு ஏதுவாக மாற்ற தேவனால் முடியும். எனவே நம் வாழ்க்கை இப்படியிருக்கிறதே என்றோ, இழந்து போன காரியங்களை குறித்தோ கலங்காமல், நம் வாழ்வில் தேவ தீர்மானம் எது என்பதை உணர்ந்து, அதற்கு கீழ்படிந்து, அவரிடத்தில் அன்புகூறுவோமானால், சகலவற்றையும் அது நடந்து முடிந்த,

அல்லது நடக்கின்ற, அல்லது நடக்கப் போகிற எதுவாயிருந்தாலும் அவை எல்லாவற்றையும் நன்மைக்கு ஏதுவாக அவர் மாற்றுவார். ஆமென், அல்லேலூயா.